புதுமலர்: 09 புரட்டாதி - ஐப்பசி இதழ்: 05

# அனல்

இணை ஆசிரியர்கள்
- யோ.நிக்ஷன்
- வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்
- ரோமர் 12:11 -

சீயோன் தேவாலயப் பிரசுரம்
ZION CHURCH PUBLICATION

01.09.2012

# பொருளடக்கம்


- அனலின் குரல்
- கதையும் கற்றதும் - சந்தோஷத்தின் இரகசியம்
- வாலிபர் வளாகம் - தேவ பயத்தின் இனிமை
- இருளின் அதிகாரம்
- பக்தர்களின் பயிலகம்
- நற்செய்தி - சிலுவையில் சிந்தின இரத்தம்
- குறுக்கெழுத்துப் போட்டி - 51
- கர்த்தர் தரவில்லை
- அருட்பணியாளர் சரிதை - ஹட்சன் டெய்லர்
- மூவரி முத்துக்கள்
- வினா விடை - 53
- அனலின் ஆன்மீக விருந்து


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

## எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
347, Navalar Road,
Jaffna, Srilanka.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

ஆசிரியர் "அனல்",
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*


திக்கற்றவர்களாய்ப் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

# அனலின் குரல்



**இயேசு கிறிஸ்துவின் ஈடுஇணையற்ற நாமத்தில் வாழ்த்துக்கள்.**

**ரோமர் 1:28 தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்.**

மனிதனுக்கு விருப்பங்களும், வாஞ்சைகளும், ஆசைகளும் இருப்பது தவறல்ல. ஆனால் அது அளவு மீறும் போது பாவமாக மாறுகின்றது. மனிதனுக்கென்ற தேவனுடைய சித்தங்களும், திட்டங்களும் உண்டு. மனிதன் வாழ்வதற்குரிய வழிவகைகளும்; வழிமுறைகளும் தேவனாலே கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குட்பட்டதாக அமையும் அவனின் வாழ்வு தேவனாலே ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாக இருக்கின்றது. எனவே எமது திட்டங்களும், எண்ணங்களும், ஆசைகளும், வாஞ்சைகளும் அவரை மகிழ்விப்பதாக அவர் விரும்பிய வண்ணமாக அமையும் போது அது மனிதனுக்கு ஆசீர்வாதமானதாக அமையும்.

இப் பூமியிலே நாம் வாழும் காலத்திற்குள் நாம் நம்மைப் படைத்தவரின் விருப்பம் செய்து அவரே எமது வாஞ்சையாக இருந்து, கிறிஸ்து இயேசுவுக்குள்ளான இரட்சிப்பைப் பெற்று, இப் பூமியில் தேவனை தொழுது அவரை உண்மையாக ஆராதித்து, போற்றி பரிசுத்தத்தைக் கடைப்பிடித்து வாழ்பவர்கள் நித்தியத்திலும் அதற்கென்றே தெரிந்து கொள்ளப்படுவார்கள். ஏனெனில் அவர்களின் விருப்பத்திற்கே தேவன் விட்டுவிடுகிறார். ஏனெனில் தெரிவு செய்யும் நிலையில் மனிதனை தேவன் சிருஷ்டித்தார்.

இதற்கமைவாகவே பாவத்தை விரும்பி நடப்பித்து, கிறிஸ்துவை அசட்டை செய்து அசுத்தத்தை விரும்பி, அதில் இன்பம் கண்டு இப் பூமியில் வாழும் நாட்களில் மெய் தேவனாகிய கர்த்தருககுக் கொடுக்க வேண்டிய மகிமையைக் கொடுக்காமல் அவரை ஆராதிக்காது மெய்யாக அவரைத் தொழுது கொள்ளாதவர்களுக்கும், மனந்திரும்பி கிறிஸ்து மூலம் வரும் புது வாழ்வைப் பெற விரும்பாதவர்களும் தாங்களாகவே தேவனற்ற இடத்தை விரும்பிச் செல்கின்றனர். **"எல்லா ஜனங்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம்"** தேவனுடைய இந்த சித்தத்தை உடைத்துக் கொண்டு செல்கின்றவர்கள் தாங்களாகவே தங்களை நித்திய அழிவுக்கு கொடுக்கின்றார்கள். தேவனும் அவர்களை விட்டுவிடுவார். எனவே **"நித்தியத்தில் பரலோகத்தில் தேவனோடு வாழ்வதற்குரிய ஒரு வாழ்க்கை முறையை பூமியில் பழகிக் கொள்ளுங்கள்; நரகத்திற்குரிய வாழ்க்கை முறையை இங்கே ஒழித்து விடுங்கள்".**

— ஆசிரியர் —




# சந்தோஷத்தின் இரகசியம்

ஒரு முறை ஒரு தகப்பன் தனது மகளுடைய பிறந்தநாள் அன்று அவளை அழைத்து அவளை ஆசீர்வதித்து வாழ்த்தினார். தனக்கு கிடைக்கப் போகும் பரிசை ஆவலுடன் எதிர்பார்த்து தனது தந்தையருகே அவள் நின்று கொண்டிருந்தாள். **அப்போது அவளது தந்தை அவளிடம் இரண்டு பெட்டிகளைக் கொடுத்தார். ஒன்று தங்க நிறமாகவும் மற்றையது கறுப்பு நிறமாகவும் இருந்தன.** அவளுக்கு இந்தக் காரியம் புதிராக இருந்தது. தனது தந்தையின் முகத்தைப் பார்த்தாள்: அவளுடைய கண்கள் **"இவைகள் எதற்கு?"** என்று கேட்டன.

தனது மகளுடைய குழப்பத்தை அறிந்த தந்தை அவளை அணைத்து தன்னருகே அமர வைத்தார். அவர் தனது மகளைப் பார்த்து, **"மகளே! இன்று உன் வாழ்வில் ஓர் புதிய வருடம் ஆரம்பிக்கின்றது. இந்த வருடத்தில் உன் வாழ்க்கையில் எத்தனையோ காரியங்கள் நடக்கப் போகிறது. இன்பம், துன்பம் இவை இரண்டையும் சந்திப்பாய். சரி! இப்போது, நான் சொல்வதைக் கவனமாக கேள். உன் வாழ்வில் நீ இன்பங்களையும், நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் காணும்போது இந்த தங்க நிற பெட்டியில் ஒவ்வொரு தடவையும் ஒரு நாணயத்தைப் போடு. அதே போல உன் வாழ்வில் வேதனை, துன்பம், கசப்பு போன்றவை ஏற்படும் ஒவ்வொரு தடவையும் இந்த கறுப்பு பெட்டியினுள் ஒரு நாணயத்தைப் போடு. இப்படியாக மறக்காமல் இதை செய்து வா"** என்று கூறினார்.

அந்தப் பெண்ணுக்கு இது சற்று ஆச்சரியமாகவும் வித்தியாசமாகவும் இருந்தது. எனினும் தனது தந்தை சொன்னபடியே செய்ய முடிவெடுத்தவளாய் அந்த இரண்டு பெட்டிகளையும் எடுத்துக் கொண்டு ஓடிச்சென்றாள். தனது அறையிலே ஓரிடத்தில் அவற்றைக் கவனமாக வைத்தாள். தனது தந்தை சொன்னபடியே ஒவ்வொரு நாளும் அந்த இரண்டு பெட்டிகளினுள்ளும் நாணயங்களை சேர்த்துக் கொண்டு வந்தாள். ஆனாலும் ஒரு காரியம் அவளை ஆச்சரியப்படுத்தியது. **தங்க நிறமான பெட்டி நாளுக்கு நாள் பாரமாகிக்கொண்டே வந்தது. ஆனால் கறுப்பு நிற பெட்டியோ முன்னிருந்த அதே பாரத்துடன் இருந்தது. அதற்குள்ளாக அவள் நாணயங்களைப் போட்ட போதும் அதன் பாரம் கூடவேயில்லை.** இது அவளை சற்று சிந்திக்க வைத்தது. எனவே அதன் காரணத்தை அறிய ஆவலாய் அந்த பெட்டிகளைத் திறந்து பார்த்தாள். அங்கே அவள் ஒரு காரியத்தைக் கண்டாள். அந்தக் கறுப்பு பெட்டியின் அடியிலே ஒரு துளை காணப்பட்டது. அதன்

நிமித்தம் அந்த பெட்டியினுள் போடப்பட்ட நாணயங்கள் அனைத்தும் வெளியே வந்துவிட்டன. அப்போது அவள் அந்த இரண்டு பெட்டிகளையும் எடுத்துக் கொண்டு தன் தந்தையிடம் ஓடிச்சென்றாள். நடந்ததை கூறினாள். **"என் துக்கத்திற்கு சான்றாக நான் போட்ட நாணயங்கள் எங்கே?"** என்று கேட்டாள்.

அப்போது தகப்பன், அவளைப் பார்த்து: **"மகளே அந்த நாணயங்கள் என்னிடம் தான் உள்ளன"** என்று கூறினார். **"அப்படியானால் ஏன் இந்த பெட்டிகளை எனக்கு தந்தீர்கள்? தங்க நிறப் பெட்டி எதற்கு? துளையோடு கூடிய இந்த கறுப்பு நிறப்பெட்டி எதற்கு?"** என்று குழப்பத்தோடு கேட்டாள் அந்தப் பெண்.

**"மகளே! தங்க நிறப்பெட்டியை நான் உனக்கு தந்ததற்கு காரணம், நீ உனக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்களையெல்லாம் மீண்டும் மீண்டும் எண்ணிப்பார்ப்பதற்காகும். அதே நேரம், கறுப்பு நிறப் பெட்டியை நான் தந்ததற்கு காரணம், உன் துக்கங்கள், துன்பங்கள் என்பவற்றை நீ சேர்த்து வைக்காமல் அவற்றை உன் மனதை விட்டு வெளியேற்றிவிடுவதற்காகும். மகளே! இது தான் சந்தோஷமான வாழ்வுக்கான இரகசியம்"** என்று கூறினார் அந்தப் பெண்ணின் தந்தை.

ஆம்! எம் நிஜ வாழ்க்கையில் இது எவ்வளவு உண்மையாகிறது. ***தேவன் எமக்கு எத்தனையோ நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் தினம் தினம் தருகிறார். சிறிதோ, பெரிதோ அவைகள் எல்லாம் எம் வாழ்வை இனிமையாக்குபவை. அவற்றை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அவற்றுக்காக தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். அதே வேளை எமக்கு வரும் துன்பங்கள், துக்கங்கள், வேதனைகள் இவற்றை நாம் சுமக்கவோ சேர்த்து வைக்கவோ தேவையில்லை. ஏனெனில் எமக்கு நல்லதொரு சுமைதாங்கியாக இயேசு இருக்கிறார்.*** நாம் எம் எல்லா பாரங்களையும் அவர் மேலே நம்பிக்கையுடன் வைத்து விடலாம். அவர் எல்லாம் பார்த்துக் கொள்வார். அந்த பெண் தனது துக்கத்திற்கு சான்றாக போட்டுக் கொண்ட நாணயங்கள் அந்த துளையினூடாக விழுந்த போது அவற்றை அந்த தகப்பன் எடுத்து தன்னோடு வைத்துக் கொண்டார். ***அதே போல எம் துக்கங்களை நாம் எண்ணித்தவிக்காமல் இயேசுவை முழுவதுமாக சார்ந்து கொள்ளும் போது அவர் எம் துக்கங்களையும் வேதனைகளையும் கண்ணோக்கி நிச்சயம் பதில் அளிப்பார்.***

எனவே இன்று முதல் எம் துக்கங்களையும் வேதனைகளையும் எண்ணி எண்ணி எம் மனதை பாரமாக்காமல் எல்லாவற்றையும் எம் அன்பின் தகப்பனாகிய இயேசுவிடம் கொடுத்து விடுவோம். ***எம் ஆசீர்வாதங்களை எண்ணி எண்ணி தேவனை மகிமைப்படுத்துவோம். உண்மையான சந்தோஷம் எம் வாழ்வை நிரப்பும்.*** சிலுவையில் எம் துன்பங்களையும் துக்கங்களையும் சுமந்து தீர்த்த தேவன் எமக்காக நின்று காரியங்களை செய்வார்.

**"தேவனின் ஆசீர்வாதம் உங்கள் அனைவரோடும் இருப்பதாக"**

ஜெ. இன்பரூபன்



# வாலிபர் வளாகம்

# தேவ பயத்தின் இனிமை!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் என் அன்பின் வாழ்த்துக்கள்!

வாலிபத்தைக் குறித்தும் வாலிப வாசனையைக் குறித்தும் (நன்மையோ/ தீமையோ) உலகம் எங்கிலும் எல்லாச் சபைகளிலும், கிராமங்களிலும், நகரங்களிலும் பேசப்பட்டு வருகின்ற ஓர் பேருண்மையாகும்.

**தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். 11தீமோத்தேயு 1:7**

அனேகர் தேவ பயத்தை தங்கள் வாழ்க்கையில் தள்ளிவிட்டு நடப்பதைப் பார்க்கும் போது அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப் படுங்கள் என்பதனை மறந்து போனார்களோ?

> தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். 11தீமோத்தேயு 1:7

தேவன் நம்மை தண்டிப்பார், நம்மீது தாக்குதல் நடத்துவார் என்னும் அடிப்படையில் நம்முடைய தேவபயம் அமையாமல் தேவன் நம்மை நேசிக்கும் நேசத்தின் பேரில் அமைந்திருக்க வேண்டும். அதுவே மெய்யான தேவபயமாகும்.

## தேவபயத்தின் மெய்யான பிறப்பிடம்.

தேவ ஆட்டுக்குட்டி (Lamb of God) **"தேவ ஆட்டுக்குட்டி"** என்பது தேவன் ஆபிரகாமுக்கு காட்டிக் கொடுத்த ஆட்டுக்குட்டியை நினைவுபடுத்துகின்றது.

**யூதருக்குள் பலி செலுத்துவதற்கு அதிகமாய் ஆட்டுக் குட்டியை எடுப்பது வழக்கமாயிருக்கிறது. அவர்களுடைய பஸ்கா பண்டிகையின் போது ஆட்டுக்குட்டியை நெருப்பினால் சுட்டுப்புசிப்பார்கள். (யாத்திராகமம் 12:3,5,8)**

எரேமியா குற்றம் சாட்டப்பட்ட போது: **தான் அடிக்கப்படுவதற்கு கொண்டு போகப்படும் சாதுவான ஆட்டுக்குட்டியைப் போல் இருந்தான்** என்கின்றான். யோவான்ஸ்நானன் **"உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:9)** என்று சொன்னதிலிருந்து **பாவநிவாரண பலியாக கொல்லப்பட்ட ஆட்டுக்குட்டியை சுட்டிக்காட்டுகிறதாக** தெரிகின்றது. சிலர் பஸ்கா ஆட்டுக்குட்டியாயிருக்குமென்று நினைக்கிறார்கள். மறுபடியும் இரண்டாம் தரம் இயேசுவைக் கண்டு **"இதோ தேவ ஆட்டுக்குட்டி" என்று மாத்திரம் சொன்னான் (யோவான் 1:36). ஆட்டுக் குட்டியில் காணப்படும் சாந்தகுணமும் குற்றமின்மையும் நமது ஆண்டவரில் காணப்பட்டபடியால் குற்றமற்ற மாசில்லாத ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து என்று சொல்லப்படுகின்றார் (1பேதுரு 1:19)**

உலகத்தின்
பாவத்தை
சுமந்து தீர்க்கிற
தேவ
ஆட்டுக்குட்டி

ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்திற்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்பது கர்த்தருடைய மகிமையில் பங்குள்ளவர்களாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டவர்களைக் குறிக்கின்றது. (வெளி. 19:9).

**அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவை என்றைக்கும் நீ உன் வாழ்வின் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்று வசனத்தின் படி நடக்க தீர்மானித்து அடி எடுத்து வைக்கின்றாயோ அது உன் வாழ்வின் தேவ பயத்திற்கான முதல் அடி. தேவ ஆட்டுக்குட்டியானவர் மீது முழு விசுவாசமுள்ளவனாயிரு.**

## தேவபயத்தின் அடிச்சுவடுகள்...

# 01. பூரணமான ஒப்புக்கொடுத்தல்

**உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்த படியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன். ஆதியாகமம் 22:12** *கர்த்தரை ஆராதித்தும் அவரது நாமத்தை உயர்த்தி ஆராதனை செய்தும் வந்த ஆபிரகாம் தேவனோடு நடந்து வந்தான்.* **அவனது வாழ்வில் ஓர் நாள் தேவன் இடைபட்டு அவனைக் கூப்பிட்டு உன் புத்திரனும், உன் ஏகசுதனும், நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நான் உனக்கு குறிக்கும் மலைகள் ஒன்றின் மேல் அவனை தகனபலியாக பலியிடு.**

*தேவனுக்கு ஆராதனை செய்வதும் சில பாவ காரியங்களில் சிறு சிறு அறிக்கையிலும் ஈடுபடுவதும் மாத்திரம் அல்லாமல் இன்னும் அவருக்கான காரியங்களில் .வளர வேண்டும். உடனடியாக, தேவன் சொன்னதை செய்வதற்கு அதிகாலையில் புறப்படுகின்றான்' ஆயத்தங்களோடு.* **அனைத்து தடைகளையும் தாண்டி குறித்த இடத்திற்கு வந்தான் ஆபிரகாம். இது இலேசான காரியம் அல்ல. தேவன் சொன்னதை செய்ய வேண்டும். அவருக்கு கீழ்ப்படிய வேண்டும். அவருக்கு துரோகம் பண்ணக்கூடாது என்ற நல்ல மனநிலையோடு கடந்து வந்து தன் குமாரனை வெட்டும்படி தன் கையை நீட்டி கத்தியை எடுத்தான (ஆதியாகமம் 22:10).**

*அப்பொழுதும் தேவன் உடனடியாக ஆபிரகாமை கூப்பிட்ட போது இதோ அடியேன் என்று சடுதியாக கீழ்ப்படிகின்றான். காரணம்:* **தவறான இடத்தில் நிற்கிறேனோ? (தேவன் சொன்ன/காண்பித்த மலை இது தானா)** *செலுத்துவது அவருக்கு பிரியமாய் அவர் அங்கீகரிக்க வேண்டும். ஆண்டவர் நான் செய்யும் காரியத்தை* **புறக்கணித்து விடக்கூடாது** *என்பதில், அதிக கவனமுள்ளவனாக சடுதியாக கத்தியை பிள்ளை மீது போடாமல் நிறுத்துகின்றான்.*




**தன்னை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தவன்: தனக்கு உண்டானவற்றையெல்லாம் தேவ விருப்பப்படி பூரணமாய் ஒப்புக்கொடுத்தலே மெய்யான தேவபயம்.**

# 02. சந்தேகத்தை சத்தியத்தால் மேற்கொள்ளல்

**பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே ஆதியாகமம் 22:12**

*தேவன் சொன்ன அனைத்துப் பகுதிகளையும் நிறைவேற்றி விட்டான்.*

- எத்தனையோ மைல் தூர பிரயாணம்
- வாகன ஆயத்தம் (கழுதையின் மேல் சேணங்கட்டி)
- வேலையாட்கள் ஒழுங்கு
- ஈசாக்கு கூடவே (பலிப்பொருள்)
- தகனபலிக்கு பிளந்த கட்டை
- குறித்த இடத்திற்கு வருதல்
- தன் கையில் நெருப்பும், கத்தியும்
- தகனபலிக்கு ஆட்டுக்குட்டி (தேவன் பார்த்துக் கொள்வார்)
- அப்புறம் இருவரும் கூடிப்போய்
- பலிபீடம் கட்டுதல்
- கட்டை அடுக்குதல்
- ஈசாக்கை கட்டினான்
- பலிபீடத்தின் மேல் கிடத்தினான்

*அனைத்து காரியங்களும் ஆபிரகாம் அர்ப்பணிப்புடன் முழு மூச்சாக ஈடுபட்டு இறுதியாக ஒரே ஒரு காரியம் மாத்திரம் தான்.* **கத்தியும் எடுக்கப்பட்டாயிற்று. வெட்டுவதற்கு தாமதம் இல்லை. அந்த நேரத்தில் ஒரு குரல்...** "பிள்ளையாண்டான் மேல் கை போடாதே" *யார் நம்பக்கூடும், தேவன் இப்படித் தடுப்பாரா? இது சத்துருவின் வேலை, என் மனதின் எண்ணம் இப்படி பல பல யோசனைகளால் மனம் (சிந்தை) நிறைந்து பிள்ளையை* **வெட்டுவதற்கு வாய்ப்பு** *அதிகம்.* **ஆனாலும் ஆபிரகாம் அதை செய்யவில்லை.**

*இது எப்படி? நடந்தது. ஆபிரகாம் சில கணம் ஓய்ந்தது ஏன்? ஒரே ஒரு காரணம் தான்.* **நித்தம் நித்தம் தேவனின் குரலைக் கேட்பவன். தவறான சத்தத்தை இலகுவில் இனம் காணக்கூடியவன். சத்திய வசனம் சொல்லுகிறது: என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவி கொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன். அவைகள் எனக்குப் பின் செல்கிறது (யோவான் 10:27).** *இது ஆபிரகாமில் உண்மை.*

**தேவனுக்கு பிரியமானது இன்னதென்று இனம் கண்டான். நீயும் தேவ சத்தத்தை கேட்க தவறும் போது தேவனுக்கு பயப்படாமல் போய்விடுவாய். கவனம்!**

## 03. சொல்லுக்கு கீழ்ப்படிதல்

**நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால்... ஆதியாகமம் 22:18**

**அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால், ஆதியாகமம் 22:16** தேவன் சொன்ன காரியத்திற்கு சிறுசிறு காரியமோ, பெரிய காரியமோ எதுவானாலும் ஒரு காரியமோ... ஒன்றிற்கு மேற்பட்ட காரியமோ... கஸ்ரமானதோ.... லேசானதோ... எதுவானாலும் அதை செய்வதற்கு உன்னை நீ முழுமையாக ஒப்புக்கொடுப்பதே மெய்யான **கீழ்ப்படிதலாகும்.** அதில் தேவன் பிரியமாய் இருக்கின்றார்.




**ஒப்புக்கொடுத்தல் தாமதமாகும் போது கீழ்ப்படிதலும் தாமதமாகும். தேவன் உன்னிடம் எதிர்பார்க்கும் அல்லது விரும்பும் காரியத்திற்கு முழுமையாக ஒப்புக்கொடுக்க காலதாமதம் பண்ணாதே. சாட்டுப்போக்கு சொல்லாதே. (ஒரு வேளை ஊழியத்திற்கு உன்னை அழைப்பாரானால் இன்றே முழுமையாக கீழ்ப்படி) ஆண்டவரின் சொல்லுக்கு கீழ்ப்படிவதே மெய்யான தேவபயம் ஆகும்.**

## 04. விசுவாச அறிக்கை (பேச்சு)

**ஆபிரகாம் தன் வேலைக்காரரிடத்துக்குத் திரும்பிவந்தான். ஆதியாகமம் 22:19**

வேலைக்காரரை நோக்கி......... உங்களிடத்திற்கு திரும்பி வருவோம். (ஆதியாகமம் 22:5).

இரண்டு வேலையாட்களை தனியே விட்டுவிட்டு எஜமானும் மகனும் போவது அவர்களுக்கு ஆச்சரியத்தையும், பயத்தையும் உண்டாக்கும் காரியம். இவ்வளவு தூரம் எங்களை அழைத்து வந்தவர் ஏன் சிறு தூரத்திற்கு எங்களை மறித்து நிறுத்திவிட்டு போகின்றார் ஒளித்து போய் என்ன நடக்கிறது என்று பார்ப்போம். இப்படி கேள்விக்கு மேல் கேள்வி எழும்பியிருக்கும். **ஆனாலும் எஜமானின் ஒரு வார்த்தை அவர்களுக்கு தைரியத்தையும் விசுவாசத்தையும் வளர்த்து பயத்தை போக்கிவிட்டது.**

நானும் பிள்ளையாண்டானும் வருவோம். தன்னுடன் இருப்பவர்களை, தனக்கு உதவி செய்கின்றவர்களை (பணி ஆட்களை) தைரியப்படுத்தி உற்சாகமூட்டுகின்றவனாக இருக்க வேண்டும். அவர்களும் காத்திருந்தார்கள் நம்பிக்கையோடு.

ஒரு வேளை இவர்களும் ஆபிரகாமோடு சென்றிருந்தால் தேவன் செய்யச் சொன்ன காரியத்தில் மாற்றம் ஏற்படுத்தியிருப்பார்கள். புதிய புதிய ஆலோசனைகளை வழங்கியிருப்பார்கள். **தேவன் சொன்ன காரியத்திற்கு எந்த விதத்திலும் (*மனைவியாலும், உறவுகளாலும், வேலையாட்களாலும், ஏன் தன் மகனாலும்*) தடை வந்திகூடாது என்பதில் வலு கவனமாக இருந்தார் ஆபிரகாம். காரணம் தேவபயமே! தேவபயமே! தேவபயமே!.**

**உன் வாலிப நாட்கள் பிரகாசிப்பதற்கும், தேவனுடைய கரத்தில் நீ கனமான பாத்திரமாய் திகழ்வதற்கும், அவர் உன்னை உபயோகிப்பதற்கும் உன்னிடம் எதிர்பார்க்கிறது தேவனுக்கு பயந்து நடக்கும் அன்பு இருதயத்தையே.**

இனிமையான வாழ்விற்கு வழிகாட்டி, தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, சொல்லுக்கு கீழ்ப்படிந்து நடப்பதே உத்தமமான பாதையாகும்!.


***ஒப்புக்கொடுத்து அவரின் சொல்லுக்கு கீழ்ப்படிந்து நடந்தால் அவர் (இயேசு) உன்னை அறிந்திருப்பார்.***

நம்பிவா இயேசுவை!

**போதகர் வேதநாயகம் சுமணன்.**

## குறுக்கெழுத்துப் போட்டி - 50
## சரியான பதில் எழுதியவர்கள்

*01. மா.ஜெயந்தி - மானிப்பாய்*
*02. க.றெஜீவன் - ஊர்காவற்றுறை*
*03. வி.ஸ்ரீஜெய - ஊர்காவற்றுறை*
*04. தே.மேரிஅக்கினேஸ் - ஊர்காவற்றுறை*
*05. ம.றீகா - ஊர்காவற்றுறை*
*06. பி.நேசமணி - மானிப்பாய்*
*07. அ.சுதர்சினி - வேரவில்*
*08. எஸ்.மார்கிறட் - மீசாலை*
*09. செ.நகுலா - பாண்டவெட்டை*
*10. செ.எமிமாள் - பாண்டவெட்டை*




# இருளின் அதிகாரம்

இருளானது ஒரு மனிதன் இருக்க வேண்டிய (வாழவேண்டிய) பிரகாரமாக வாழ விடாது. எதைச்செய்தாலும் தோல்வியும், சலிப்பும், வெறுப்பும், தனிமையுணர்வும், தாழ்வு மனப்பான்மையும் இப்படியே மனிதனை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் அனைத்து காரியங்களுக்கும் ஒப்பிடலாம்.

தேவன் தன்னுடைய ஒரேபேறான செல்லகுமாரன் இயேசுக் கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பியதன் பெரிய நோக்கம்:

**இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். கொலோசெயர் 1:13**

இதுவாகும். "விடுதலை" ஆவி, ஆத்தும, சரீர விடுதலை. **இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு உண்மையும் நீதியுமுள்ளதாய் இருக்கின்றது.** இன்றே உன் பாவங்களை அவரிடம் அறிக்கை செய்து பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொள்!.




ரேமா




இங்கு பவுல் வித்தியாசமான நிலைகளில் உள்ளவர்களுக்கு எப்படி ஊழியம் செய்ய வேண்டும் எனக்கூறுகின்றான். காரணம்: பட்சபாதம் காட்டாதிருப்பதற்காகவாகும்.

## 01. முதிர்வயதுள்ளவர்கள் - 1தீமோத்தேயு 5:1-2

தீமோத்தேயு ஓர் இளைஞனாக இருப்பதால் முதிர் வயதுள்ளவர்களை அலட்சியப்படுத்த சோதிக்கப்படலாம். **எனவே பவுல் எல்லோரிலும் அன்புகூர்ந்து சேவை செய்யும்படி புத்திகூறுகின்றான்.**

சபையானது ஒரு குடும்பம். கவனிக்க வேண்டிய விதம்:

- *முதிர்வயதுள்ள புருஷன் - தகப்பன்*
- *முதிர்வயதுள்ள ஸ்திரி - தாய்*
- *பாலிய புருஷர் - சகோதரர்*
- *பாலிய ஸ்திரி - சகோதரிகள்*

## 02. முதிர்வயதுள்ள விதவைகள் - 1தீமோத்தேயு 5:3-10

சபை ஊழியத்தின் ஆரம்பத்தில் இருந்தே விசுவாசமுள்ள விதவைகள் கவனிக்கப்பட்டிருக்கிறார்கள் - அக்கறை காட்டப்பட்டது. அப்போஸ்தலர் 6:1, அப்போஸ்தலர் 9:39 **இஸ்ரவேலிலும் கூட விதவைகள் கவனிக்கப்பட வேண்டும் என தேவன் கூறியிருந்தார். உபாகமம் 10:18, உபாகமம் 24:17.** தேவையுள்ள விதவைகளுக்கு சபை மனஉருக்கம் காண்பிப்பது சரியானதே.

**அத்துடன் உண்மையான தேவையின்றி இருப்பவர்களுக்கு சபையானது தன் வளங்களை செலவழியாது இருப்பதையும் பார்க்க வேண்டும்.** சில தனிப்பட்டவர்களும், குடும்பத்தவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் சபையிடமிருந்து கறப்பார்கள். **ஆனால் இவர்கள் வேலை செய்யமாட்டார்கள். தங்கள் வளங்களை சரியான முறையில் பாவிக்கவும் மாட்டார்கள்.** இங்கு சபை எப்படிப்பட்ட தகமையுடைய விதவைக்கு உதவவேண்டும் எனவும் பவுல் கூறுகின்றார்.

1. **மனித உதவி அற்றவள். 1தீமோத்தேயு 5:5.** (அதாவது தனிமையில் இருக்கின்றவள்.)
2. **உண்மையுள்ள சாட்சி கொண்ட விசுவாசி. 1தீமோத்தேயு 5:5b.** (தேவனிடத்தில் நம்பிக்கையுள்ளவள், இரவும் பகலும் வேண்டுதல்களிலும், ஜெபத்திலும் நிலைத்திருப்பவள்)
3. **60வயதுக்கு குறையாத ஒரே புருஷனை உடையவள். 1தீமோத்தேயு 5:9** (60துக்கு பின் திருமணம் குறித்த ஆசை வராது)
4. **குடும்ப வாழ்க்கையைக் குறித்த நற்சாட்சி 1தீமோத்தேயு 5:10**
5. **நற்கிரியைகளைக் குறித்த நற்சாட்சி 1தீமோத்தேயு 5:10**

## 03. இளம் விதவைகள் - 1தீமோத்தேயு 5:11-16

இளம் விதவைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டாம் என பவுல் கூறுகின்றான். **அதற்கான காரணம்: 1தீமோத்தேயு 5:11-15.** இளம் விதவைகளின் வயது. **இளம் விதவைகள் இயற்கையாக ஆண்கள்பால் கவரப்பட்டு திரும்பவும் திருமணம் செய்ய விரும்புவார்கள்.** 1தீமோத்தேயு 5:11-13.

இளம் விதவைகள் பற்றிய காரணத்தை விளக்கிய பவுல் இப்போது கூறுவதைப்பாருங்கள். 1தீமோத்தேயு 5:14-16.

## 04. சபை உத்தியோகத்தர்கள் - 1தீமோத்தேயு 5:17-25

இங்கு மூப்பர்களைப் பற்றி சொல்லப்படுகின்றது.

# தீமோத்தேயு 06

இவ் அதிகாரத்தில் பவுல் சபையில் காணப்படும் பலதரப்பட்ட விசுவாசிகளுக்கு எப்படி ஊழியம் செய்வது எனக்கூறுகின்றார்.

## 01. கிறிஸ்தவ அடிமைகள் - 1தீமோத்தேயு 6:1-2

ஒரு சரித்திர ஆசிரியர் ரோம இராஜதானியில் சனத்தொகையில் அரைப்பங்கினர் அடிமைகளாகவே

கணக்கெடுக்கப்பட்டனர் எனக் கூறுகின்றார். **இவர்களில் அதிகமானவர்கள் படித்தவர்களாகவும், பண்பட்ட மக்களாகவும் இருந்தனர்.** இவர்கள் சட்டபூர்வமாக மனிதர்கள் என்றே கணக்கெடுக்கப் பட்டவில்லை. **சுவிசேஷத்தின் இரட்சிப்பின் செய்தி, விடுதலையின் செய்தி அடிமைகளைத் தொட்ட போது அவர்களும் விசுவாசிகளானார்கள். அடிமைகள் வீட்டுவேலையைவிட்டு வெளியே வரும் போது இப்படிப்பட்ட உள்ளூர்சபைகளில் இவர்கள் பங்கு பெறலாம்.**

ஆனாலும் இங்கு ஒரு பிரச்சினை: **சில அடிமைகள் தாம் பெற்றுக் கொண்ட புதிய அனுபவத்தை வைத்து கீழ்ப்படியாமல் இருந்தார்கள்.** இவர்கள் கிறிஸ்துவுக்குள் அடைந்து இருக்கும் ஆவிக்குரிய சுதந்திரம் இவர்களது சமூக அந்தஸ்த்தை மாற்றவில்லை - இதை உணரவேண்டும். **இவர்கள் சபை ஐக்கியத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட போதிலும் கூட மாற்றப்படவில்லை.**

**01. அவிசுவாசியான எஜமானுடைய அடிமைகள் – 1தீமோத்தேயு 6:1**

எந்த கிறிஸ்தவ எஜமானும் தன் அடிமை அடிமைத்தனத்தின் நுகத்திற்கு உட்பட்டிருக்கின்றான் என நினைக்கக்கூடாது. **அவர்களை அன்போடும் மரியாதையாகவும் நடக்க வேண்டும்.** ஒரு அடிமை இரட்சிப்படையாத தன் எஜமானுக்கு விரோதமாக கலகம் பண்ணுவது சுவிசேஷத்திற்கு அவமரியாதையைக் கொண்டுவரும். **"தேவனுடைய நாமமும்" உபதேசமும் தூஷிக்கப்படும்.**

**02. விசுவாசிகளான எஜமானை உடைய அடிமைகள் – 1தீமோத்தேயு 6:2**

இங்கே உள்ள ஆபத்து என்னவெனில்: **ஒரு கிறிஸ்தவ அடிமை தானும் தன் எஜமானும் கிறிஸ்தவர்களாக இருப்பதால் அதைத் தனக்கு சாதகமாக அல்லது இலாபமாக பயன்படுத்துவது.**

என் எஜமான் என் சகோதரன்: **அவர் என் சகோதரனாக இருப்பதால் எனக்கு எதையும் கட்டளையிட முடியாது.** இந்த மனப்பாங்கு வீட்டிலும் சபையிலும் பெரிய பிரச்சினைகளைக் கொண்டு வந்துவிடும். **இங்கு பவுல் ஏன் ஒரு கிறிஸ்தவ அடிமை தன் எஜமானுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்று கூறுகின்றான்.**

***இதற்கான மூன்று காரணங்கள்:***

01. அவர்களது எஜமான்கள் கிறிஸ்தவர்கள் (விசுவாசிகள்)

இப்படி இருக்கையில் எப்படி ஒருவர் இன்னொருவர் மேல் மேலதிகமாக எடுப்பது.

02. அவர்களது எஜமான்கள் பிரியர்

அன்பு கலகம் விளைவிக்காது உத்தரவாதத்தில் இருந்து தப்ப சந்தர்ப்பத்தையும் எதிர்பார்க்காது.

03. இருவரும் நல் வேலையின் பலனைப் பெற்றுக் கொள்பவர்கள்

தேவ சித்தத்திற்குள் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கு ஒருவர் சேவை செய்யும் போது அங்கே ஆசீர்வாதம் உண்டு.

## 02. வேற்றுமையான உபதேசங்களைப் போதிப்போர் - 1தீமோத்தேயு 6:3-10

பவுல் இந் நிருபத்தை ஆரம்பிக்கும் போதே இப்படிப்பட்டவர் களைக் குறித்த எச்சரிப்போடு ஆரம்பித்தார். **அத்துடன் இவர்களது போதனை தப்பெனக்காட்டி ஆட்சேபித்தான்.** ஒரு உள்ளூர் சபையில் இருக்கும் ஆவிக்குரிய தலைவர்கள் என்ன போதிக்கப்படுகின்றது என்பதனைக் குறித்து எப்போதும் அவதானமாக இருக்க வேண்டும்

**ஏனெனில் தப்பான உபதேசங்கள் இலேசாக நுழைந்துவிடும்.**

***தப்பாய் உபதேசிப்போரின் அத்தாட்சிகள் - 1தீமோத்தேயு 6:3-5***

01. அத்தாட்சி இவர்கள் இயேசு கிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்க ளையும் தேவபக்திக்கேற்ற உபதேசங்களையும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய ஆரோக்கியமான வசனங்கள் தேவபக்தி உள்ளதும், தேவபக்தியைத் தூண்டக்கூடியதும் உண்டாக்கக்கூடியதும் ஆகும். **ஏசாயா அப்படி போதிப்பவர்களை பரீட்சை செய்து பார்த்தான் எனப்பாருங்கள் (ஏசாயா 8:20).** ஒரு சபை ஆரோக்கிமான உபதேசத்தைப் பற்றிப்பிடித்திருப்பது அவசியம்.

02. போதிப்பவனின் சுயமனப்பாங்கு

இவன் தாழ்மையுள்ளவனாக இருப்பதற்கு பதிலாக இறுமாப்பு உள்ளவனாக இருப்பான். **இவன் இறுமாப்புக்கொள்ள ஒன்றும் இல்லை. ஏனெனில் இவன் ஒன்றும் அறியாதவன் 1தீமோத்தேயு 6:4.** வார்த்தையை விளங்கிக் கொள்ளும் விசுவாசிகளின் உள்ளம் கொழுந்துவிட்டு எரியுமே ஒழிய தலை பெரிதாகாது.

**இந்த இறுமாப்புள்ள மனப்பாங்கு வாக்குவாதம் பண்ண வழிவகுக்கும்.** “நோய் கொண்ட” இந்த பதம் ஆரோக்கியமற்ற அபிலாஷைகளினால் நிறைந்தது என அர்த்தப்படும். **இப்படிப்பட்ட வேத வசனத்திற்கு முரணான போதனை விளைவிப்பது:** பொறாமை, சண்டை, தூஷணம், பொல்லாத சம்சயங்கள், சந்தேகம், மாறுபாடான தாக்கங்கள்.

**இதற்குள் இருக்கும் ஆபத்து என்னவெனில்: மக்கள் சத்தியத்தை விட்டு புறம்பாக்கப்படுகின்றார்கள்.** இவர்களது எண்ணமோ தாங்கள் சத்தியத்தைக் கண்டுபிடிக்கிறார்கள். **இவர்களது எண்ணம் என்னவெனில், கூட்டங்களில் விவாதிப்பது (இப்படி விவாதிக்கும் போது அவர்கள்**

**காட்டுவது அறியாமை). நாம் கிருபையில் வளர்கிறோம்.** ஆனால் பலன் எந்த முன்னேற்றமும் இல்லை. ஒழுக்க சீர்கேடு தான். ·

***இவர்கள் இப்படி உபதேசிப்பதற்கு காரணம்: 1தீமோத்தேயு 6:5-10***

இவர்கள் தேவபக்தியை ஆதாயத் தொழிலாக எண்ணுபவர்கள்.

***உண்மையில் தேவபக்தியானது:***

01. எம் கிறிஸ்தவ விசுவாசத்தின் அறிக்கையாக இருக்க வேண்டும்.

02. பரிசுத்த ஆவியின் வல்லமையின் மூலம் வாழும் உண்மையான பரிசுத்த வாழ்வு ஆகும்.

ஆனால் இவர்களோ தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தின் அறிக்கையை பணம் சம்பாதிக்கும் ஒரு வழியாகவே கொண்டார்கள். **இவர் செய்தது உண்மையான ஊழியம் அல்ல. மாறாக ஒரு சமய வியாபாரம்.** பவுல் தன் அழைப்பையும் ஊழியத்தையும் பணம் சேகரிக்கும் வழியாக பாவியாது இருப்பதில் மிகவும் கவனமாக இருந்தார்.

**பொருளாசை உள்ளவன் என்று தன்னை ஒருவரும் குற்றப்படுத்காது இருக்க கொரிந்திய சபையிடம் பணம் வாங்க பவுல் மறுத்தான். 1கொரிந்தியர் 9:15-19. தீமோத்தேயுவையும** எம்மையும் எச்சரிக்க பொருளாசையினால் உண்டாகும் நான்குவித ஆபத்தை பவுல் இங்கே எழுதுகின்றான்.

01. ஆஸ்தி ஒரு போதும் திருப்தியைக் கொண்டுவராது 1தீமோத்தேயு 6:6

திருப்தி என்பது வெளித்தோன்றும் சூழ்நிலைகளின் மத்தியிலும் எம்மை சமாதானமாக வைத்திருக்கும் உள்ளான போதுமென்ற நிலை. **உண்மையான திருப்தி கையில் இருக்கும் செல்வத்தில் இருந்து வருவதில்லை. ஆனால் இருதயத்தில் உள்ள தேவபக்தியில் இருந்தே வருகின்றது.**

02. செல்வம் நிலைத்து நிற்காது 1தீமோத்தேயு 6:7

ஒருவனது ஆவி சரீரத்தைவிட்டு நீங்கும் போது அது தன்னுடன் எதையும் எடுத்துச் செல்ல முடியாது.

03. எமது அடிப்படை தேவைகள் 1தீமோத்தேயு 6:8

உணவு உடை இவைகளே எமது முக்கிய அடிப்படைத் தேவை.

(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)

தொடரும்...

# சிலுவையில் சிந்தின இரத்தம்




**கொலோசெயர் 1:20 அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.**

சாதாரண இரத்தம் அல்ல; உலகத்தை, அண்ட சராசரங்களைப் படைத்து ஆண்டு நடத்தும் சர்வ பூமியின் அதிபதியின் இரத்தம். **இது எதற்கு? எதைச் செய்யும்? எங்கு வரைக்கும் கிரியை செய்யும்?** என்ற போராட்டத்தினை நாம் தெளிவு நிலைக்கு கொண்டு வரவேண்டிய அவசிய நிலை அவசியமாகின்றது. **இப்போதைய சந்ததியின் தேவையும் அதுவே.**

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எதையும் செய்யும்; எங்கும் செய்யும், எப்படியும் செய்யும். எனவே இயேசுவின் இரத்தம் செய்வது என்று பார்த்தால்:

- **மீட்கும் தன்மை கொண்டது**
- **ஜீவனைக் காப்பாற்றுகின்றது**
- **புதிய மாறுதலைத் தருகின்றது**

## 01. மீட்கும் தன்மை கொண்டது

***மீட்கும் தன்மை என்பது ஒரு ஜீவனுக்காக கொடுக்கும் பெறுமதி.*** இங்கே பாவியான ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு பதிலீடு செலுத்தப்பட்டது. அந்தப் பதிலீடுதான் இயேசு கிறிஸ்து ஆவார். எனவே மீட்க வேண்டிய அவசியத்தை உணர்த்தும் அந்த இரத்தம் பூலோகவாசிகளை பரலோக வாசிகளாக மாற்றுகின்றது. பூலோக வாசிகளை மீட்கும்படியாக பரலோக வாழ்வை விட்டு ஓர் ஜீவ இரட்சகர் பூமிக்கு வந்தார். அவர் தான் மெய்யான இயேசுகிறிஸது ஆவார். எனவே

அவரது இரத்தம் மீட்கும் தன்மை கொண்டதாகும்.

## 02. ஜீவனைக் காப்பாற்றுகிறது

***நரகவாசிகளாக வாழும் மனித குலத்தை மீட்கும் நடவடிக்கையே ஒரு தெய்வகுமாரனின் ஜீவ இரத்தம் சிந்தப்பட்டதாகும்.*** ஜீவனைக் காப்பாற்றும்படி சிந்தப்பட்டது; இது ஜீவனுள்ள இரத்தம் ஆகும். ஆத்துமாவையும் ஆவியையும் மாமசத்தையும் கொண்ட மனிதன் மனுசீக சாவை அடைய முதல் கிறிஸ்துவின் ஜீவனைப் பெற யார்தானும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்கான ஒரு தொடர்புதான் இயேசுவின் இரத்தம். இந்த இரத்தமே ஜீவனைக் காப்பாற்றுகிறது.

## 03. புதிய மாறுதலைத் தருகிறது

***மனித வாழ்வில் ஒவ்வொரு காலங்களிலும் ஏதாவது மாற்றம் அவசியம்.*** காரணங்கள் இன்றியும் காரணங்களுடனும் ஏதாவது மாறுதல் நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

அவரது இரத்தத்தை விசுவாசிக்கும் போது, பேய்கள் ஓடுகிறது; நோய்கள் விலகுகிறது; சாபங்கள் ஓடுகிறது, பில்லி சூனியங்கள், மந்திரவாதங்கள், கட்டுக்கள் யாவும் ஒழிந்து போகின்றது. எல்லாமே மாறுதல் ஆக முடிகின்றது.

**எனவே இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை மீட்கிறது, ஜீவனைத் தருகிறது, மாறுதல் வருகிறது. எனவே அன்பானவர்களே! இந்த ஜீவ இரத்தத்தோடு தொடர்பு கொள்ளுங்கள். பரலோகம் உங்கள் சொந்தமாகும்.**

**தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!**

# வினா விடை - 51


## சரியான விடை எழுதியவர்கள்



01. ம.றீகா - ஊர்காவற்றுறை
02. வி.கலியுகன் - ஊர்காவற்றுறை
03. து.டானியல் - ஊர்காவற்றுறை
04. து.கிரிசாந் - ஊர்காவற்றுறை
05. வி.நிதர்சன் - ஊர்காவற்றுறை
06. ம.றெஜீவன் - ஊர்காவற்றுறை
07. வி.நிதர்சனா - ஊர்காவற்றுறை
08. வி.ஸர்மிளா - ஊர்காவற்றுறை



# குறுக்கெழுத்துப்போட்டி – 51




குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களே தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம். - நன்றி

## இடமிருந்து வலமாக

01. கொலோசெய கிறிஸ்தவர்கள் மத்தியிலுள்ள அன்பைக் குறித்து பவுலுக்கு தெரியப்படுத்தியவர்.
04. நன்மை செய்யும்படி உனக்கு ................யிருக்கும் போது அதைச் செய்யத் தக்கவர்களுக்கு செய்யாமல் இராதே
09. இவன் அந்தியோகியாவுக்கு போய் உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று கூறினான்.

## வலமிருந்து இடமாக

03. இதை ஊதி ஜனங்களெல்லாரும் ராஜாவாகிய சாலொமோன் வாழ்க என்று வாழ்த்தினார்கள்
05. ஆமோஸ் தீர்க்கதரிசனம் சொல்லும் நாட்களில் யூதாவின் ராஜாவாக இவர் இருந்தார்
06. "நீங்கள் என் ஜனமல்ல, நான் உங்கள் தேவனாயிருப்பதில்லை" என்ற அர்த்தத்தை உடைய பெயர்
13. பூமியிலே பாவங்களை மன்னிக்க இயேசுகிறிஸ்துவுக்கு அதிகாரம் இருக்கின்றது என்பதை நிரூபிக்க இந்த நோயாளி சுகமாக்கப்பட்டார்

## மேலிருந்து கீழாக

01. கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்கும்படி பவுலினால் புத்தி சொல்லப்பட்ட பெண்களில் ஒருவர்
02. தேவபக்தி மிகுந்த இவன் ஒரு பெண்ணைக் கண்டு பயந்து மரிக்க நினைத்தான்
03. பரிசுத்த நகரம்
08. யூதரை அழிக்க இவன் சீட்டு போடுவித்தான்
10. தன்னை மாறாள் என்று அழைக்கும்படி கூறியவள்

## கீழிருந்து மேலாக

07. தாவீதின் மனைவிகளில் ஒருத்தி
09. சகரியாவின் குமாரனாகிய யோவானுக்கு வனாந்தரத்திலே தேவனுடைய வார்த்தை உண்டான காலத்தில் பிரதான ஆசாரியராக இருந்தவர்களில் ஒருவர்
11. கொரிந்து சபையிலே வாக்குவாதங்கள் இருப்பதை பவுல் இந்த வீட்டாரால் அறிந்து கொண்டான்
12. எகிப்து தேசம் எங்கும் மூன்று நாள் இது உண்டாயிற்று



# கர்த்தர் தரவில்லை?

## வேதப்பகுதி: லூக்கா 11:9–18

நீ ஒரு உணவு விடுதிக்குப் போனால் நீ எதை உண்ண விரும்பு



கிறாயோ அது உனக்கு கிடைக்கும். **உணவு விடுதி முதலாளி உன்னுடைய உடல் நலனைக் குறித்து கவலைப்படமாட்டார்.** நீ ஐஸ் கிரீம் கேட்கிறாய். **"அது சாப்பிட்டால் சளிபிடிக்கும்; நான் தரமாட்டேன்"** என்று அவர் சொல்லமாட்டார்.

ஆனால் நீ மருத்துவரிடம் போனால் நீ கேட்கும் மருந்தை அவர் தரமாட்டார். **உன்னுடைய சரீர நலனுக்கு எது சரியாக இருக்குமோ அதைத்தான் தருவார்.**

அது போலவே தேவனும், நீ ஜெபத்தில் கேட்கின்ற எல்லாவற்றையும் அவர் தரமாட்டார். **உன்னுடைய வாழ்க்கைக்கு எது நலமாயிருக்குமோ அதைத்தான் தருவார்.** ஏனென்றால் அவர் உன்மேல் அக்கறை உள்ளவர்.

**சிந்தனைக்கு: நாம் கர்த்தரிடம் கேட்ட எல்லாம் கிடைக்காது. நமக்கு எது நலமானதோ அதையே அவர் தருவார்.**

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! – ஜூலை 07

# அருட்பணியாளர் சரிதை

தரித்திரர் ஆனாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்கிய

## ஹட்சன் டெய்லர்

உடைமைகளையும் திருடிக்கொண்டு அவரைத் தனியே விட்டு ஓடிப்போனான். ஆகாரக்குறைவினாலும், தூக்கமின்மையாலும் ஆயாசப்பட்டவராய் அதிக களைப்படைந்தார். சரீரம் பெலவீனப்பட்டதால் பாதை ஓரத்தில் மயங்கி விழுந்து விட்டார். இந் நிலையில் அவருடைய பிரதான நோக்கம் தன்னைச் சுற்றிலுமுள்ள சீனர்களைப் பற்றியதே ஆகும். தன் உடைமைகளை இழந்ததினால் ஏற்பட்ட தவிப்பு அவரிடம் காணப்படவில்லை. கிறிஸ்துவை உடனடியாக பிரசங்கிக்க ஆரம்பித்து விட்டார். நிங்போ மொழியில் ஏற்கனவே இருந்த புதிய ஏற்பாட்டுப் புத்தகத்தை மறுபடியும் திருத்தியமைத்தார். மரியா டையர் என்ற நங்கையை நிங்போ நகரில் சந்தித்து திருமணம் செய்து கொண்டார். இருவரும் சேர்ந்து நோயுற்றோரை கவனிப்பதிலும், சீனர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலும் ஈடுபட்டனர். நீண்ட நேர படிப்பு, உபந்நியாசம் செய்வது, பல வேறுபட்ட பருவ நிலைகளில் நீண்ட பிரயாணங்களை மேற்கொள்ளுவது ஆகியவை டெய்லர் அவர்களின் சுகத்தைப் பெரிதும் பாதித்தது. ஏழு ஆண்டுகள் இடைவிடாத சேவைக்குப் பின், அவருடைய சுகவீனத்தின் காரணமாக இங்கிலாந்து தேசம் செல்ல நேரிட்டது. ஓய்வு எடுக்கவும், நற்சுகம் பெறவும் சுய தேசத்திற்கு திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

## சீன உள்நாட்டு மிஷன் ஸ்தாபனம்

லண்டன் நகரில் அவர் தங்கியிருக்கும் போது, மருத்துவக் கல்வியைத் தொடர்ந்து படித்தார். சீன தேச விளக்கப்படம் ஒன்று அவருக்கெதிராக சுவற்றில் தொங்கவிடப்பட்டிருந்தது. அதில் பதினொரு தனித்தனி பிரதேசங்களையும், முப்பத்தெட்டு கோடி மக்களையும் சித்தரித்து இருந்தது. இத்தனைக் கோடி மக்களுக்கு சுவிசேஷத்தைச் சொல்ல, ஒரே ஒரு மிஷனரி கூட அன்று இருக்கவில்லை. இது அவருக்கு எப்போதுமே நினைவூட்டுதலாகவே இருந்தது. சீன தேசத்தின் தேவைகளை, கைப்பிரதிகளின் வாயிலாகவும், சிறு பிரசுரங்களாகவும் எழுதி வந்தார். இந்தப்

பதினொரு பிரதேசங்களில் பணிபுரிய இருபத்து நான்கு மிஷனரிகளுக்காக ஜெபித்து வந்தார். **இரண்டு நாள் கழித்து ஒரு சிறு தொகையை விசுவாசத்தின் விளைவாக சீன உள்நாட்டு மிஷன் ஸ்தாபனத்தின் பெயரில் அந்தத் தொகை வைப்புத் தொகையாக இருப்பில் போடப்பட்டது. விசுவாசத்தின் விளைவாக சீன உள்நாட்டு மிஷன் ஸ்தாபனம் அன்று நாட்டப்பெற்றது.** *"சிறிய தொகையோடு ஏராளமான கடவுளின் வாக்குத்தத்தங்களும் அன்று மிஷன் ஸ்தாபனத்திற்காக முதலீடு செய்யப்பட்டது"* என்று ஹட்சன் சொன்னார்.

**தேவன் அவருடைய மன்றாட்டுக்களுக்குப் பதில் அருளினார். பதினொரு மாதங்களுக்குப் பின் பதினாறு மிஷனரிகளோடு சீன நாட்டிற்கு ஹட்சன் பயணமானார்.** அவரோடு சென்ற பதினாறு மிஷனரிகளும், அவரைப் போலவே முழுவதுமாய் கர்த்தரைச் சார்ந்து திருப்பணிக்கு ஒப்படைத்தவர்கள். தேவ வாக்குகளை நம்பி ஏற்றுக் கொண்டு தங்களைத் தத்தம் செய்திருந்தனர். ஒருவருக்காகிலும் நிச்சயமான மாதச் சம்பளம் கிடைக்கும் என்ற உறுதியில்லை. எந்த இடத்தில் பணி செய்யப்போகின்றோம்? அவ்விடத்தின் நிலைமை யாது? என்று அறியாத நிலையில் பயணமாயினர். சீன நாட்டில் அவர்களை வரவேற்க ஒருவருமில்லை. உள்நாட்டுப் பகுதிக்குச் செல்லவே அனைவரும் தீர்மானித்திருந்தனர். உள் நாட்டில் வெளிநாட்டவருக்கு பலத்த எதிர்ப்பு இருந்து வந்தது. **கப்பல் பிரயாணத்தின் போது, ஹட்சன் குழுவினர் ஆற்றிய திருமறை உரையாடல்கள் மூலமாய் கப்பல் சிப்பந்திகள் கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். கப்பலின் மொத்த ஊழியர் முப்பத்து நான்கு பேர்.** *"கடல் கடந்து செல்வதால் ஒரு மிஷனரி உருவாகுவதில்லை. தன் வீட்டிலும் சுய நாட்டிலும் பயன்படாதிருக்கிற ஓர் ஆள் அயல் நாட்டிலும் கிறிஸ்துவின் சேவையில் பயனுள்ளவராய் இருக்கமாட்டார்"* என்று ஹட்சன் அடிக்கடி கூறுவார்.

## சீன நாட்டை மறுமுறை வந்தடைதல்

ஷாங்காய் துறைமுகத்தில் வந்து சேர்ந்த அனைத்து மிஷனரிகளும், உயிர் ஆபத்துக்களுக்குப் பயப்படாமல் உள்நாட்டிற்குள் போகத் தீர்மானித்தனர். இந்தக் குழுவிற்கு இளமை மிக்க டெய்லர், தளபதியாக தலைமை ஏற்று நடத்திச் சென்றார். அனேகம் முறை அவர்களுக்கு தங்கும் வசதியோ ஏற்ற ஆகாரமோ இருந்ததில்லை. **கர்த்தரை நம்பினபடியால் அவரே அவர்களுடைய தேவை எல்லாவற்றையும் சந்தித்தார்.** சிறுபிள்ளைக்கொத்த விசுவாசமே, டெய்லர் அவர்களின் வெற்றியின் இரகசியமாய் இருந்தது. *"ஒவ்வொரு பிரச்சினையும் விசுவாசத்தினால் மேற்கொண்டு வெற்றியடைவதே, கர்த்தருடைய பிள்ளைக்கு பலமும் ஊட்டமும் கொடுக்கக் கூடிய வல்லமையாக மாறுகின்றது"* என்று ஹட்சன் சொல்லுவார்.

இருபது ஆண்டுகளுக்கு பின்னர், சீன உள்நாட்டு மிஷன் ஸ்தாபனம் மிகப்பெரிய அளவில் வளர்ந்து சிறப்பான பணிபுரிந்தது. இருநூற்று இருபத்தைந்து மிஷனரிகளும், ஐம்பத்தொன்பது ஆலயங்களும், ஆயரத்து எழுநூறு விசுவாசிகளையும் கொண்ட ஸ்தாபனமாய் விளங்கிற்று. பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான கைப்பிரதிகளும, சிறு புத்தகங்களும் சீன மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. தெய்வத் திருப்பணியில் இழப்புகளும் உண்டு. ஹட்சன் டெய்லருடைய மனைவியும் மூன்று மக்களும் இறந்து போயினர். அவருடைய மனைவி பன்னிரண்டரை ஆண்டுகள் அவருக்கு மிக உதவியாக இருந்தவள். காலரா வியாதியினால் மரித்துப்போனாள். அவர் அதிகமாய் நேசத்த அருமை மகள் இறந்த போது, *"எங்கள் இதயங்கள் வெடித்துச் சிதறுகின்றன. இந்த அனுபவம் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்ந்து நிற்கின்றன. எங்கள் இயேசு எல்லாவற்றையும் நன்றாக செய்தார்"* என்றும், அவர் மனைவி இறந்த போது, *"நானோ தனித்து விடப்பட்டவன் அல்ல, முன்னரைப் பார்க்கிலும் கர்த்தர் எனக்கு அதிக நெருக்கமாக உள்ளார்"* என்றும் எழுதி வைத்தார். ஹட்சன் இப்படிப்பட்ட பெரும் இழப்புகளைக் கிறிஸ்துவின் நிமித்தம் தைரியத்தோடு தாங்கிக் கொண்டார். சீன நாட்டின் திருப்பணித் தேவைகளை எல்லாம் அவர் சென்ற இடமெல்லாம் மக்களுக்கு எடுத்துச் சொல்லுவார். ஆனால் ஒரு போதும் *"பணம் தாருங்கள்"* என்று கேட்டதே இல்லை. அவருக்குப் பணமோ, ஊழியர்களோ தேவைப்பட்டபோதெல்லாம், கர்த்தருக்கே தம் வேண்டுதல்களைத் தெரியப்படுத்தினார். சீன உள்நாட்டு மிஷன் பணிக்கென்று காணிக்கையெடுக்க அவர் ஒரு போதும் அனுமதித்ததே இல்லை. அவருடைய திட்டமான இந்தக் கொள்கையின் அடிப்படையில் தான், மிஷன் ஸ்தாபனம் இயங்கி வந்தது. கடவுளுக்கு மகிமையைக் கொண்டு வருவதே அவருடைய நோக்கம்.

## சீன தேசமே எப்போதும் அவர் நினைவு

ஹட்சன் டெய்லர் பலமுறை இங்கிலாந்து வந்த போதிலும், அவர் நினைவெல்லாம் சீன நாட்டைப் பற்றியதே. அதனால் அவர் திருப்பணிக்குத் திரும்பி விடுவார். இரண்டாவது முறையும் திருணம் செய்து கொண்டதோடு, சீன தேசத்தின் ஒவ்வொரு பட்டணத்தையும் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்த தீர்மானித்தார். அவருடைய முதுகெலும்பில் விபத்தால் ஏற்பட்ட காயத்தினிமித்தம் பல மாதங்கள் படுக்கையில் இருக்க வேண்டியதாயிற்று. சுகவீன நாட்களே கடவுள் அவருக்குத் தெளிவான வெளிப்பாடுகளைத் தந்தருளிய நாட்களாகும். சீன திருப்பணியின் திட்டமான செயல்படும் நோக்கங்களை வரையறுத்தார். அதற்கென்று தம் மனைவியுடன் அமெரிக்க ஐக்கிய நாடுகள்,

கனடா, அவுஸ்திரேலியா, தென் அமெரிக்கா ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இவ்விடங்களில் எல்லாம் சீன தேசத்தின் ஏராளமான தேவைகளை எடுத்துச் சொன்னாரேயன்றி, பண உதவியை ஒருபோதும் கேட்டதில்லை. **1900ஆம் ஆண்டு அவர் இங்கிலாந்தில் இருந்த சமயம் சீன தேசத்தில் பணி செய்து கொண்டிருந்த எழுபத்தொன்பது மிஷனரிக் குடும்பங்கள் சீனர்களால் படுகொலை செய்யப்பட்டதை கேள்விப்பட்டார். அவர்களில் இருபத்தொரு பேர் மிஷனரிகளின் பிள்ளைகளாகும். நான்கு வருடங்கள் கழித்து அவர் தமது இரண்டாவது மனைவியையும் இழந்து விட்டார்.**

டெய்லர் இங்கிலாந்து தேசத்தில் தங்கியிருக்க மனமற்றவராய் 1905ஆம் ஆண்டு தன்னுடைய பதினோராவது பயணத்தை மேற்கொண்டார். இங்கிலாந்திலிருந்து சீனாவுக்குச் சென்ற கடைசி பயணமாகவும் அது அமைந்தது. சீன நாட்டில் அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. அவர் சாங்ஷா பட்டணத்திற்கு செல்ல விரும்பினார். அப் பட்டணம் அவருடைய திருப்பணித் திட்டத்தில் இருந்த கடைசி மாநிலத்தின் தலைநகரமாகும். அந் நகரைச் சுவிசேஷத்தின் ஆரம்ப பணிக்கென்று திறந்துவிட வந்து சேர்ந்தார். சாங்ஷா நகரில் அவர் வந்து இறங்கியதுமே, கடவுளோடு ஐக்கியப்படும்படியாக பரலோகம் சென்றடைந்தார்.

ஹட்சன் டெய்லர் இறக்கும் போது, சீன உள்நாட்டு ஸ்தாபனத்தில் எண்ணூற்று நாற்பத்தொன்பது மிஷனரிகள் பணியாற்றிக் கொண்டிருந்தனர். சீன நாடு கம்யூனிஸ்டுகளால் ஆக்கிரமிப்பு செய்யப்படும் வரை, சீன உள்நாட்டு மிஷன் கிறிஸ்துவின் சேவையில் ஈடுபட்டிருந்தது. **ஹட்சன் டெய்லர் உலக ஐசுவரியம் ஒன்றும் இல்லாதவர், வறுமையில் வாழ்ந்தவர், வாழ்க்கை வசதிகளை உதறித்தள்ளி, அனேகரை ஐசுவரியவான்களாக்க தன்னை ஏழ்மையாக்கினார். ஜீவனுள்ள தேவனை முழுவதுமாய் நம்பிச் சார்ந்ததே இவர் வாழ்க்கையின் இரகசியம். வேத வசனங்களில் காணப்படும் வாக்குகளை எல்லாம் நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டவர்.** தேவன் எவைகளையெல்லாம் தமது வசனத்தில் வாக்குத்தத்தம் செய்திருக்கின்றாரோ, அவைகளை நிச்சயம் செய்வார் என்ற உறுதியோடு பணியாற்றினார். *"கைகூடாது, நடக்கவே நடக்காது, ஒருவரும் செய்ய முடியாது என்று மனிதன் நினைப்பவைகளைப் பார்த்து விசுவாசம் எனும் பற்றுறுதி சிரிக்கும். கீழ்ப்படிதலும், கடவுளுடைய சித்தத்தைச் செய்தலும், கேள்விகளைக் கேட்டு தாமதிக்கும் மனப்பான்மையைக் கொண்டு வராது"* என்னும் பொன்மொழிகளைக் ஹட்சன் அடிக்கடி கூறுவார். **விசுவாசமும் கீழ்ப்படிதலும் கர்த்தருடைய திருப்பணியாளர்களின் வல்ல செயல்களின் இரகசியமாகும். நீயும் கர்த்தருடைய பணியில் விசுவாசத்தோடு கீழ்ப்படிவாயா?**

**நன்றி:** (இச் ஜீவியச் சரிதை தியோடர் வில்லியம்ஸ் எழுதிய "சிலுவை வீரர்" என்னும் நூலிலிருந்து பெறப்பட்டது)



முற்றும்.

நீ யார்?
என்பது தெரிந்தால்
அதுவே வெற்றி

எரிகோ மதில்கள்
என்றும்
இருப்பதில்லை

வானத்து நிலவு
நம்பிக்கையானால்
பதிலே சூரியனாகும்

செங்கடல்கள்
மோசேயின்
கோல்கள் சந்திக்கும் வரை

நீ தேவை தேவனுக்கு
என்றால்
அவருடைய தேவையே நீ தான்

சந்நிதிகளில் சாட்சி
சொல்ல
சத்திய புருசர்கள் தேவை

கட்டப்படும் கட்டிடங்கள்
தேவனின் திட்டங்களின்
வெளிப்பாடுகள்

கழிவுகளின் மத்தியில்
மாணிக்கங்கள்
மறைந்திருப்பதில்லை

காலங்கள் உமது கரத்தில்
என்றால்
வாழ்க்கையும் அவரே

கற்குவியல்கள் போல
விக்கிரகங்கள்
தனித்து நிற்பவர் கர்த்தர்

## குறுக்கெழுத்துப் போட்டி – 50
## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. எஸ்றா
08. ஞானமும்
09. பொக்கிஷம்
10. பெனின்னாள்
11. அதோனியா

**வலமிருந்து இடமாக**

03. யோனத்தான்
05. யோபு
07. அபியாள்
12. பில்லிசூனியம்

**மேலிருந்து கீழாக**

01. கிதியோன்
02. தெளிந்த புத்தியும்
03. யோவாஸ்

**கீழிருந்து மேலாக**

06. யோவான்
07. அரோசேத்
13. சாராள்

## வினாவிடை – 52
## சரியான பதில்கள்

*01. பிரசங்கி 5:2*

*02. இராணுவ சேர்வைக்காரரும், ஜனங்களும் – எரேமியா 42:2*

*03. ஏசாயா 19:22*

*04. எரேமியா 26:13*

*05. ஏசாயா 48:17*

*06. கர்த்தர் – எகிப்தியரின் சேனையை – யாத்திராகமம் 14:24*

*07. இஸ்ரவேல் புத்திரர் – யாத்திராகமம் 36:3*

*08. எசேக்கியா – ஏசாயா 38:12*

*09. அர்தசஷ்டா ராஜா – எஸ்றா 7:25*

*10. தாவீது – 1சாமுவேல் 29:11*

# வினா விடை - 53

01. தன்னுடைய எல்லா ஜனத்திற்கும் நியாயமும் நீதியும் செய்து வந்தவன் யார்?

02. தன் நீதியிலே கெட்டுப்போகிற நீதிமானுமுண்டு என்று சொன்னது யார்?

03. யாருடைய வஸ்திரம் வெளிச்சத்தைப் போல வெண்மையாயிற்று?

04. இளையவளை நேசித்த மணமகன் யார்?

05. உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்றவர் யார்?

06. சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்றது யார்?

07. துன்மார்க்கரின் ஒளி அவர்களை விட்டு எடுபடும் என எங்கே வாசிக்கின்றோம்?

08. எங்கள் அந்தரங்க பாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர் என்று பாடியது யார்?

09. தன் ஆஸ்தி முழுவதையும் சேர்த்துக் கொண்டு பிரிந்து வேறே தேசத்துக்கு போனவன் யார்?

10. துன்மார்க்கர் போடும் வெளிச்சம் பாவமே என எங்கே வாசிக்கிறோம்?

---

**சந்தோஷமாய் இருப்பது எமது இலக்கல்ல:**

**பரிசுத்தமாய் இருப்பதே எமது இலக்கு.**

Our Aim Should
Be Holiness and
not Happiness.

# அனலின் 2012 ஆன்மீக விருந்து

## தம்பிள்ளைகளுக்குத் தேவன் நியமித்துள்ள விசேஷித்த பாதை

*ஒரு தாயார் தனது மகனைக் குறித்து மிகுந்த வேதனையோடு இருந்தார். ஏனெனில் அவருடைய மகனது இரண்டு சிறுநீரகங்களும் செயற்படாததின் நிமித்தம் அவர் மிகவும் வியாதிப்பட்டிருந்தார். அவருக்கு மாற்று சிறுநீரகங்கள் பொருத்தப்பட்டிருந்த போதிலும் சிறிது நாட்களில் அவை மீண்டும் செயலிழந்தன. அவரது மனைவியினுடைய சிறுநீரகத்தை பொருத்த முயற்சித்த போதும் அது பொருந்தவில்லை. அவருக்கு தெரிந்த இன்னொரு நபர் சிறுநீரகத்தை தருவதாக அவருக்கு வாக்கு கொடுத்திருந்தார். ஆனால் இவர்களிடம் பணம் இல்லாத காரணத்தினால் அந்த முயற்சியும் தோற்றுப்போனது. இதனால் அந்த தாயார் மிகவும் வேதனையடைந்திருந்தார்.*

**"எனக்கு ஏன் இப்படி நடக்கின்றது! ஏன் தேவன் இதை அனுமதித்தார்?"** என்று மனமுடைந்திருந்தார். நான் அவரை சந்தித்து அவருக்காக ஜெபித்தேன். **தேவன் அற்புதமானவர், எதையும் செய்ய வல்லவர், தேவன் தாமே இந்த சூழ்நிலையை உங்கள் குடும்பத்திற்கு அனுமதித்திருந்தால் என்ன செய்யப் போகின்றீர்கள்?** என்று அவரிடம் கேட்டேன். அத்துடன் நீங்கள் தேவனுடைய அன்பைவிட்டு விலகப்போகின்றீர்களா? **உங்கள் வேதனை, கஷ்டம் எல்லாம் தேவனுக்குத் தெரியும். எனவே "தேவனே இதனை நீர் அனுமதித்திருந்தால் இந்த வழியே செல்ல என்னை ஒப்புக்கொடுக்கின்றேன்" என்று கூறுங்கள் என்று அவரிடம் கூறினேன்.**

ஆம்!! தேவன் தனது பிள்ளைகளுக்கென்று விஷேசித்த பாதை ஒன்றை வைத்துள்ளார். நாம் நமது சொந்த வழியை தெரிந்தெடுத்தால் தொலைந்து போய்விடுவோம். எனவே தேவன் அமைத்த பாதையை எம் கண்முன் நிறுத்துவோம். துன்பங்கள் வரும்போது பொறுமையோடு சகித்தால் இன்பம் கிட்டும். யாத்திராகமம் 14ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள ஓர் சம்பவத்தை இன்று ஆராய்ந்து பார்ப்போம்.

இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயின் வழிநடத்தலோடு எகிப்தை விட்டு வெளியேறி வருகின்றார்கள். அவர்களுக்கு முன்பாக செங்கடல் பின்பாக எகிப்திய சேனை. இஸ்ரவேல் ஜனங்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். இஸ்ரவேலர் எகிப்தைவிட்டு வெளியேறினால் தமக்கு மிகுந்த இழப்பு என்பதனை பார்வோன் அறிந்திருந்தான். எனவே தன் சேனைகளோடு அவர்களைப் பின்தொடர்ந்தான். **இஸ்ரவேலர் என்றால்: தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் அல்லது அழைக்கப்பட்டவர்கள் என்று பொருள்படும். அதே போல தேவனை அறிந்த நாமும் ஆவிக்குரிய இஸ்ரவேலரே.**

எனவே உண்மையான இஸ்ரவேலருக்கு தேவன் சில காரியங்களை அனுமதிப்பார். இப்படியான ஓர் இக்கட்டான சூழ்நிலையைக் கண்ட போது இஸ்ரவேலர் கலங்கினார்கள். அவர்கள் எகிப்திலே எத்தனையோ அற்புதங்களை கண்ட போதிலும் அவர்களைப் பயம் ஆட்கொண்டிருந்தது. இந்த நிலைமை அவர்களுக்கு புரியாத புதிராக இருந்தது. **ஆனால் தேவன்: மோசேயை நோக்கி நான் செய்யப்போகும் அற்புதத்தைப் பார், அதன் மூலம் நான் மகிமைப்படுவேன் என்று கூறினார். எனவே தேவன் செங்கடலைப் பிளந்து பிரத்தியேகமான ஒரு பாதையை உண்டாக்கி இஸ்ரவேலருக்கு கொடுத்தார்.** நெருக்கம் உங்களைத் தொடரலாம், ஆனால் நீங்கள் தேவனுடைய வழியைத் தெரிந்து கொண்டால் தேவன் அற்புதங்களைச் செய்வார். ஏனென்றால் தேவன் தனது பிள்ளைகளுக்கு விசேஷித்த பாதையை நியமித்துள்ளார்.

**யோபு 28:7 ஒரு வழியுண்டு, அது ஒரு பட்சிக்கும் தெரியாது: வால்லூறின் கண்ணும் அதைக் கண்டதில்லை.** பிரியமானவர்களே, உற்சாகமடையுங்கள். அனேக நாளாக துன்பமா? கவலைப்பட வேண்டாம். தேவன் வழிநடத்தும் வழி வல்லூறின் கண்ணுக்கும் தெரியாது. **வல்லூறு என்ற பதம் சத்துருவைக் குறிக்கின்றது.** இதிலிருந்து நாம் அறிந்து கொள்வது என்ன? சத்துரு நினைக்க முடியாத அளவுக்கு தேவனுடைய வழி இருக்கும். **யாத்திராகமம் 14:16 நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்துவிடு: அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோவார்கள்.** தேவன் மோசேக்கு கட்டளை கொடுக்கின்றார். மோசே தேவகட்டளைப்படி செயற்பட்டான், பாதை உருவானது. **நீங்கள் ஆண்டவருடைய வல்லமையை எப்போதாவது நினைத்துப் பார்த்ததுண்டா?**

**அப்படி செய்வீர்களானால் சோர்வின் வேளையில் தேவன் உங்களை தமது வல்லமையால் நிறைப்பார். முடிவு எடுக்கும் வேளைகளில் தமது வல்ல மையால் நிறைப்பார். வேதனைகள் சூழும் வேளைகளில் தமது வல்லமை யால் நிறைப்பார்.**

எனவே தேவ வல்லமை யைச் சொல்லிச் சொல்லி அவரைத் துதியுங்கள். சோர்வுக்கு இடம் கொடுக்க வேண்டாம். மரணத்தை ஜெயித்த இயேசு! சத்துருவின் தலையை நசுக்கின இயேசு! என்று உரிமை பாராட்டுங்கள். சத்துரு ஒடுங்கிப்போவான். உங்களை அறியாமலே இயேசுவின் பலம் உங்களைப் பற்றிக் கொள்ளும். நான் தேவனுடைய பிள்ளை! நான் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட் டவன்! நான் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டவன்! என்று அறிக்கை யிட்டு பாருங்கள். வல்லமையை காண்பீர்கள். **தேவன் சில வேளைக ளில் உங்களுக்கு வியாதியை அனு மதிக்கலாம், நீங்கள் இறக்கும் வரைக்கும் அந்த வியாதி உங்களுக்கு காணப்படலாம். ஆனால் அறிக்கை யிட்டு தேவ வல்லமையை பெறுங் கள்.** இயேசுவும் நம்மைப்போல ஒரு பாடுள்ள மனுஷனாகவே இந்த உலகத்தில் வாழ்ந்தார். ஆனால் அவர் எந்த நிலையிலும் பாவம் செய்யவில்லை. **எனவே தேவ வழியில் நடக்க தயாராகுங்கள். நாம் சோர்ந்து போகாதிருந்தால் நன்மையைக் கண்டடைவோம். கர்த்தரை நம்புங் கள் அவர் வழிதிறப்பார்.**

அனேக பெற் றோர்கள் தமது பிள் ளைகளைக் குறித்து அதிகம் கவ லைப்படுவார்கள். தேவன் செங்கடலை பிளந்ததை நினைத்துக் கொள்ளு ங்கள். அதன் மூலமாக தேவநாமம் மகிமைப்பட்டது. ஆனால் அதற்கு முன்பு ஓர் பிரச்சினை ஏற்பட்டது. அந்த பிரச்சினையை அவர்கள் எப்படி எதிர்கொண்டார்கள்? **மோசே தேவனை நோக்கிப் பார்த்தான். அதனால் தேவன் காரியத்தை வாய்க்கப் பண்ணினார். அதே போல உங்கள் பிரச்சினை வேளைகளிலே தேவனைப் பற்றிக் கொள்ளுங்கள். தேவனுக் காக பொறுமையாக காத்திருங்கள். அப்போது தேவமகிமை வெளிப்படும்.** தேவன் அந்தக் காரியங்களின் மூலமாகவே உங்கள் பிள்ளைகளை மகிமைப்படுத்துவார். மற்றவர்கள் நாம் எப்படி வாழவேண்டும் என்று உங்களதும் உங்கள் பிள்ளைக ளதும் வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்வார்கள். **இரட்சிக்கப்பட்டவர் கள் மற்றவர்களுக்கு வாழ்ந்து காட்ட வேண்டும். வியாதியின் வேளைகளில் எப்படி நடந்து கொள்ள வேண்டும்!" என்று கிறிஸ்தவர்கள் வாழ்ந்து காட்ட வேண்டும். கடினமான பாதைகளில் நடந்து காட்டுங்கள். தேவமகிமை வெளிப்படும். குறைவின் நேரத்தில் நடந்து காட்டுங்கள். தேவமகிமை வெளிப்படும்.**

**யாத்திராகமம் 14:17**
**எகிப்தியர் உங்களைப் பின்தொடர் ந்து வரும்படி நான் அவர்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி, பார்வோனாலும் அவன் இரதங்கள் குதிரைவீரர் முதலாகிய அவனுடைய எல்லா இராணுவத்தாலும் மகிமைப் படுவேன்.** தேவன் பார்வோனின்

இருதயத்தைக் கடினப்படுத்தினார் என்று பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. பார்வோன் இஸ்ரவேலரை போகவிடான் என்று தேவன் அறிந்திருந்தார். எனவே கடினப்படுத்தினார், **ஒருவன் மனந்திரும்பாத சந்தர்ப்பத்தில் சில வேளைகளில் தேவன் அவர்களிடமிருந்து தமது முகத்தை திருப்பிவிடுவார்.** தேவன் தீமையால் சோதிப்பவரல்ல. எல்லாருக்கும் மனந்திரும்ப அவர் நிச்சயம் சந்தர்ப்பம் அளிப்பார். *யூதாசை எடுத்துக் கொண்டால் இயேசு அவனை மன்னித்திருக்கலாம் என சிலர் நினைப்பார்கள். ஆனால் யூதாஸ் எப்படிப்பட்டவன் என்று இயேசு அறிந்திருந்தார். ஒரு சந்தர்ப்பத்தில் சீஷர்கள் இயேசுவை நோக்கி அவரை காட்டிக் கொடுக்கப் போவது யார் என்று கேட்டனர். அதற்கு இயேசு: இந்த துணிக் கையை தோய்த்து எவனுக்கு கொடுப்பேனோ அவன் தான் என்று சொல்லி அதை யூதாசுக்கு கொடுத்தார். (யோவான் 13:25-26) அந்த சந்தர்ப்பத்தில் கூட யூதாஸ் மனந்திரும்பவில்லை. இன்னொரு தடவை இயேசு யூதாசிடம் நீ முத்தத்தினாலேயோ என்னைக் காட்டிக் கொடுக்கின்றாய் என்று கேட்கின்றார். (லூக்கா 22:48) அந்த சந்தர்ப்பத்திலும் யூதாஸ் இயேசுவிடம் மன்னிப்பு கேட்கவில்லை. அவன் மனந்திரும்பாமலேயே போய்விட்டான்.*

**யாத்திராகமம் 14:18,22,24,25 (18.) இப்படி நான் பார்வோனாலும் அவன் இரதங்களாலும் அவன் குதிரைவீரராலும் மகிமைப்படும் போது, நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிவார்கள் என்றார். 22. இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து போனார்கள்: அவர்கள் வலது புறத்திலும் அவர்கள் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது. 24. கிழக்கு வெளுத்துவரும் ஜாமத்தில் கர்த்தர் அக்கினியும் மேகமுமான ஸ்தம்பத்திலிருந்து எகிப்தியரின் சேனையைப் பார்த்து, அவர்கள் சேனையைக் கலங்கடித்து, 25. அவர்களுடைய இரதங்களிலிருந்து உருளைகள் கழலவும், அவர்கள் தங்கள் இரதங்களை வருத்தத்தோடே நடத்தவும் பண்ணினார்: அப்பொழுது எகிப்தியர்: இஸ்ரவேலரைவிட்டு ஓடிப்போவோம், கர்த்தர் அவர்களுக்குத் துணைநின்று எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார் என்றார்கள்.** இங்கே இஸ்ரவேலர் பிளக்கப்பட்ட செங்கடலின் ஊடாக கடந்து செல்கையில் பார்வோனும் அவன் சேனையும் அதே பாதையில் உட்செல்கின்றார்கள். ஆனால் அவர்களால் செல்ல முடியவில்லை.

தேவகட்டளைப்படி மோசே திரும்ப கோலை நீட்டினான். செங்கடல் மீண்டும் ஒன்றிணைந்தது. எகிப்திய சேனை மாண்டது. **பிரியமானவர்களே! தேவ பிள்ளைகள் போகும் வழியில் தேவனை அறியாதவர்கள் போகமுடியாது. அது போல இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்கள் போகும் வழியால் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படாதவர்கள் போக முடியாது.** சிலவேளைகளில் எனக்கு மட்டும் தான் இப்படி பிரச்சினை, எனக்கு மட்டும் தான் வேதனை என்று நீங்கள் நினைக்கலாம். **ஆம்! நீங்கள் தேவபிள்ளைகள் என்பதால் இந்த பாதை உங்களுக்குத் தான். மற்றவர்களுக்கு இல்லாதிருக்கலாம். எனவே சோர்ந்து போகவேண்டாம்.**

சோர்ந்து போனால் பரலோக பயணப் பாதை தடைபடும். பரலோகத்திற்கு செல்ல விரும்புகின்றீர்களா? அப்படியானால் வேதனை, கஷ்டம், எல்லாவற்றையும் கடந்தே செல்ல வேண்டும்.

**இயேசு சிலுவை சுமந்தார். அந் நாட்களில் அது நிந்தனையான ஒரு செயல், சாபம், அருவருக்கப்பட்ட செயல். ஆனாலும் இயேசு அதனை எமக்காக செய்து முடித்தார்.** இயேசு சீஷராகிய எமக்கு கூறுவது என்ன? ஒருவன் தன்னைப் பின்பற்ற விரும்பினால் தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என் பின்னே வரக்கடவன் என்று கூறுகின்றார். சிலுவை கிறிஸ்தவத்தின் பொதுவான சின்னமாக கருதப்படுகின்றது. ஆனால் உண்மையாக அது நிந்தை, அவமானம், சாபம் என்பனவற்றின் அடையாளம். **எனவே நாம் அறிய வேண்டியது என்னவெனில் கிறிஸ்தவர்களாகிய நாம் நிந்தை, அவமானம் போன்ற காரியங்கள் இல்லாமல் வாழமுடியாது. இயேசு அப்படி அவமான சின்னத்தினால் ஜெயம் பெற்றாரோ அதே போல நாமும் எம் வாழ்வில் ஜெயம் பெற வேண்டும். பாவம் செய்யாமல் ஜெயம் எடுக்க வேண்டும். அதுவே இயேசு காட்டிய வழி.**

எனவே அவமானம், அவப்பெயர், நிந்தை எல்லாவற்றையும் நாம் சகிக்க வேண்டும். குற்றம் பிடிப்பவர்களின் கண்கள் எப்போதும் எம்மை பார்த்துக் கொண்டேயிருக்கும். செய்யாத ஒன்றை செய்ததாக சொல்வார்கள். ஏதேனும் காரியத்தை பிழையாகவே கதைப்பார்கள். கவலைப்பட வேண்டாம். இயேசுவின் நாமத்தின் நிமித்தம் அது நடைபெறவே வேண்டும். தேவன் நியமித்த வழி இதுவென்றால் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுங்கள்.

***எனக்குத் தெரிந்த ஒரு சகோதரன் ஏறக்குறைய எட்டு வருடங்களாக என்னுடன் கதைப்பதில்லை. அவர் ஏன் அப்படி இருக்கின்றார் என்று நான் அடிக்கடி நினைப்பேன். ஆனால் அதற்கு காரணம் ஏதுவும் இருக்கவில்லை. ஒரு நாள் அவர் என்னிடம் வந்து மன்னிப்பு கேட்டார். "நான் உங்களைக் குறித்து தப்பாக நினைத்துவிட்டேன், பிழையாக கதைத்துவிட்டேன், என்னை மன்னியுங்கள்" என்றார். நான் ஏன் என்று எதுவுமே கேட்கவில்லை.*** தேவன் இந்த நிலையை எனக்கு அனுமதித்தார் என நான் நினைத்துக் கொண்டேன். உங்கள் வழியிலும் துன்பம் வரலாம், நேசித்தவர்கள் பகைக்கலாம். தேவன் அனுமதித்தால் சோர்ந்து போக வேண்டாம்.

***தாவீதைப்பாருங்கள் ஒரு முறை சீமேயி தாவீதை தூற்றிக் கொண்டிருந்தான். ஆனால் தாவீது தேவன் அதை அனுமதித்தார் என்று பொறுமையாக இருந்தான். (IIசாமுவேல் 16:5-12)*** அது போல் நீங்களும் பொறுமையாக நடந்து பாருங்கள். தேவன் ஆசீர்வதிப்பார். ***பவுலுக்கு ஒரு பெலவீனம் இருந்தது. வேத ஆராட்சியாளர்கள் அவருடைய கண்களில் இருந்து எப்பொழுதும் கண்ணீர் வழிந்து கொண்டே இருக்கும் ஏன்று பதிவு செய்துள்ளனர்.*** ஆனால் அந்த பெலவீனத்தில் தேவன் கிருபை அளித்தார். எனவே என்ன துன்பம், துக்கம் வந்தாலும் தேவனே இது நீர் தந்த வழி, நான் போகின்றேன் என்று கூறுங்கள். ***யோசேப்பை பாருங்கள். அவன் தனது சகோதரர்களைப் பார்த்து நீங்கள் எனக்கு***

*தீமை செய்ய நினைத்தீர்கள், ஆனால் தேவன் அதை நன்மையாக மாற்றினார் என்று கூறுகின்றான். தாவீது சவுலுக்குப் பயந்து ஒளிந்து ஒளிந்து திரிந்தான். சந்தர்ப்பம் ஏற்பட்ட போதும் அவன் சவுலின் மேல் கைபோடவில்லை.* பொறுமையை காத்துக் கொண்டான். அதனால் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவானான்.

*அண்மையில் பத்திரிகையில் ஓர் காரியம் வாசித்தேன்: புல்லாங்குழலிலே துளைகள் உண்டு. அந்த துளைகள் ஓர் பெலவீனம் என எடுத்துக் கொண்டால் அவை தான் நல்ல இசை வரக்காரணமாக அமைகின்றன என நாம் அறிந்து கொள்ளலாம்.* எனவே பெலவீனங்களும் நன்றாக பயன்படுத்தப் படலாம். **உங்களிடமும் பெலவீனம் உண்டா? அதை தேவனுக்கென்று பயன்படுத்துங்கள். தேவன் அதை மகிமைப்படுத்துவார்.** உங்களது வாழ்க்கையை தேவநாம மகிமைக்காக எப்படி மாற்றலாம்? அவருடைய பாதையில் தேவனை மகிமைப் படுத்திய வண்ணம் வாழுங்கள். **ஒரு காரியத்தை நினைவில் கொள்ளுங்கள்: நீங்கள் தேவனுடைய பிள்ளைகள் என்றால் உங்களுக்கு பிரச்சினைகள் வரும். அதை தேவன் அனுமதிக்கின்றாா. "இது என் வளர்ச்சிக்கே!"** என்று நினைத்துக் கொள்ளுங்கள். தேவனுடைய பாதைகள் வித்தியாசமானவைகள்.

*எஸ்தருடைய சம்பவத்தை எடுத்துக் கொண்டால்: ஆமான் என்பவன் யூதரை அழிக்கத் திட்டம் இட்டான். ஆனால் தேவன் எஸ்தர் மூலமாக ஒரு வழியை ஏற்படுத்தினார். ஆமானின் திட்டம் தவிடு பொடியானது. எஸ்தர் தேவனுடைய வழியில் சென்றாள். அதனால் யூதர்கள் காப்பாற்றப்பட்டனர்.* தேவ வழியில் வேதனை, இல்லாமை, துக்கம் உண்டு. ஆனால் முடிவு மகிமை. **பரலோக பாதை: கரடு முரடாக, ஒடுக்கமும் இடுக்கமுமாக காணப் படும். ஆனால் இதுவே கிறிஸ்தவ பாதை. அதுவே உங்களது பாதையும் கூட. எனவே பொறுமையோடு ஓடுங்கள். துன்பம் இன்பமாக மாறும்: கண்ணீர் களிப்பாக மாறும்.** தேவன் உங்களுக்கென்று நியமித்த பாதையில் ஓடுங்கள். எல்லாம் ஆசீர்வாமாக மாறும். அவருடைய வருகை மிகவும் சமீபமாய் இருக்கின்றது.

**முற்றும்.**

**தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக !**

**போதகர் வே.மகராஜா**

**ஒரு வழியுண்டு, அது ஒரு பட்சிக்கும் தெரியாது: வால்லூறின் கண்ணும் அதைக் கண்டதில்லை.**

**யோபு 28:7**

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள்
உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி
சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால்
சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 140.00 Per Year |
| இந்தியா | S.L Rs 390.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 840.00 Per Year |
| சிங்கப்பூர், மலேசியா | S.L Rs 420.00 Per Year |
| மத்திய கிழக்கு நாடுகள் | S.L Rs 510.00 Per Year |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா | S.L Rs 720.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்

## சந்தா கூப்பன்

பெயர் :- ..........................................................

விலாசம் :- ..........................................................

..........................................................

..........................................................

..........................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.



To: ..............................................................

..............................................................

..............................................................

..............................................................

**Zion Church Office,**
**No. 347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**